இணைப்பு–V

(229ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

செய்தி மற்றும் விளம்பரம்
(தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)
அறிவிப்புகள்,
2010–2011

1. "பத்திரிகையாளர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

- *ரூ.72,000/-க்குள் ஆண்டு வருமானம் பெறும் பத்திரிகையாளர்கள் அனைவரையும் உடனடியாக "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில்" உறுப்பினராகச் சேர்த்து, அடையாள அட்டை வழங்கிட பத்திரிகையாளர்களுக்கென்றே மாவட்டந்தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.*
- *ரூ.72,000/-க்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு ஆண்டிற்கு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மருத்துவக் காப்பீடு அளிக்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.*
- *67:33 என்கிற விகித அடிப்படையில் மருத்துவக் காப்பீட்டுப் பிரிமியம் தொகை செலுத்தும் திட்டம் உருவாக்கப்படும். அரசு செலுத்தும் 67%க்குத் தேவையான தொகை முதற்கட்டமாக தற்பொழுது பத்திரிகையாளர் நல நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் ஒரு கோடியிலிருந்தும் மற்றும் அதன் வட்டியிலிருந்தும் செலுத்தப்படும். எஞ்சியுள்ள 33% தொகையினை, ஊடகப் பிரதிநிதிகளோ அல்லது அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர் சங்கங்களோ செலுத்த இசைவு தெரிவித்தால் இதற்கான திட்டம் உருவாக்கப்படும்.*

2 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, இந்த அரசு பதவியேற்றது முதல் சென்னை, திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, சேலம், தஞ்சை, வேலூர் போன்ற நகரங்களில் பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல், கோயம்புத்தூரிலும் தகுதியுள்ள பத்திரிகையாளர்களுக்கு நடப்பு நிதியாண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

[2010 மே 11

3. பத்திரிகையாளர் ஓய்வூதியத் தொகை ரூபாய் நான்காயிரத்திலிருந்து ரூபாய் ஐந்தாயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

4. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூபாய் இரண்டாயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறாக உயர்த்தி வழங்கப்படும்.

5. பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமானம், பெற்ற பணிக்கொடை மற்றும் பணியிலிருந்தபோது பெற்ற வருமானத் தொகை வரம்பு பின்வருமாறு உயர்த்தப்படுகிறது.

- *பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் பெற்றுவரும் ஆண்டு வருமான வரம்பு ரூ.20,000/-லிருந்து ரூ.72,000/-ஆக உயர்த்தப்படுகிறது.*
- *பணியிலிருந்து ஓய்வுபெறும்பொழுது பெற்ற பணிக்கொடை வரம்பு ரூ.30,000/-ஆக இருந்தது. இது தற்போது ரூ.1,00,000/-க்குள் இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப் படுகிறது.*
- *பணியிலிருந்தபோது பெற்ற ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/- ஆக இருந்தது. இது தற்போது ரூ.1,20,000/-க்குள் இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்படுகிறது.*

✶ *பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுவதற்கு இருபது ஆண்டுகள் பணி அனுபவத்தை நிரூபிக்க பணியாற்றிய நிறுவனத்திலிருந்து அனுபவச் சான்றிதழ் பெற்று அளிக்கவேண்டும் என்ற விதி உள்ளது. பல்வேறு காரணங்களால் அனுபவச் சான்றிதழ்கள் பெற முடியாதவர்கள், அதனைக் குறிப்பிட்டுச் சான்றளித்து அதற்கு ஈடாக பின்வரும் ஆவணங்களை, இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணிபுரிந்ததைத் தெரிவிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

➢ *பணி நியமன ஆணை*

➢ *பத்திரிகையாளர் அங்கீகார அட்டை*

➢ *செய்தியாளர் அட்டை*

➢ *மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்படும் அடையாள அட்டை*

2010 மே 11]

- பணியாற்றிய நிறுவனத்திலிருந்து பாராட்டுச் சான்றிதழ்
- தொழிலாளர் சேமநல நிதியத்திற்கு ஆண்டுதோறும் தொகை செலுத்தப் பட்டதற்கான இரசீது.

6. பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி பெறுவதற்குத் தேவைப்படும் அனுபவச் சான்றிதழ் பெற முடியாதவர்கள் பின்வரும் ஆவணங்களை, பணிபுரிந்த ஆண்டுகளைத் தொடர்ச்சியாக தெரிவிக்கும் வகையில் சமர்ப்பிக்க வேண்டும்.

- பணி நியமன ஆணை
- பத்திரிகையாளர் அங்கீகார அட்டை
- செய்தியாளர் அட்டை
- மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்படும் அடையாள அட்டை
- பணியாற்றிய நிறுவனத்திலிருந்து பாராட்டுச் சான்றிதழ்
- தொழிலாளர் சேமநல நிதியத்திற்கு ஆண்டுதோறும் தொகை செலுத்தப்பட்டதற்கான இரசீது.

7. சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் 300 நபர்களுக்கு மட்டும் இலவசப் பேருந்துப் பயண அட்டை வழ்ங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு அரசு அங்கீகார அட்டை கூடுதலாகப் பெற்ற 202 நபர்களுக்கும் இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்படும்.

8. சென்னையில் பணிபுரியும் தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு/ஒளிப்பதிவாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்படுவதுபோல், அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் பணிபுரியும் தகுதிவாய்ந்த 500 தொலைக்காட்சி செய்தியாளர்கள்/ஒளிப்பதிவாளர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டை இவ்வாண்டு முதல் வழங்கப்படும்.

9. திரைப்படத் தொழிலுக்குத் தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் வகையில் தமிழில் பெயரிடப்படும் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரிவிலக்கு தொடர்ந்து அளிக்கப்படும்.

[2010 மே 11

10. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் பயிற்சிக்கென, மாறி வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப அதிக துல்லியம் வாய்ந்த வீடியோ படப்பிடிப்புக் கருவிகள், அதனுடன் நவீன வீடியோ படத்தொகுப்புக் கருவிகள் மற்றும் அதன் துணைக் கருவிகளுடன் (High definition video camera shooting system with non-liner editing equipments with accessories) ரூ.50 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

11. தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் செய்திப்படப் பிடிப்பு மற்றும் தயாரிப்புப் பணிகளை மேம்படுத்த நவீன, அதிக துல்லியம் வாய்ந்த மூன்று வீடியோ படப்பிடிப்புக் கருவிகள் (High definition video camera) ரூ.27 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

12. தலைமையிடம் மற்றும் மாவட்டங்களில் உள்ள புகைப்படப் பிரிவினை மேம்படுத்த, தற்போது பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் புழக்கத்திலுள்ள முறையுடன் போட்டி போட, துல்லியமாக நவீனத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி புகைப்படமெடுக்க, புகைப்படப் பிரிவிற்கு நான்கு வைட் ஆங்கிள் போட்டோகிராபிக் லென்சுகள் (Wide angle photographic lens) ரூ.2.40 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

13. செய்தி வெளியீட்டுப் பிரிவினை நவீனப்படுத்திட அதிகத் திறன் வாய்ந்த ஸ்கேனர் கருவி ஒன்று, அதிநவீன ஒளிநகல் கருவி ஒன்று, அதிகத் திறன் வாய்ந்த நிகரி கருவிகள் இரண்டு, கணினி ஒன்று மற்றும் இரு ஒலிப்பதிவுக் கருவிகளும் ரூ.2.12 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

14. தற்காலச் சூழ்நிலைக்கு இணையதள வசதியுடன் கூடிய மடிக்கணினி அவசியமாகிறது. எனவே இத்துறையின் தலைமையிடம் மற்றும் மாவட்டப் புகைப்படக்காரர்கள் பயன்பாட்டிற்கு இணையதள வசதியுடன் கூடிய நான்கு மடிக்கணினிகள் ரூ.1.60 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

15. தலைமையிடத்தின் பயன்பாட்டிற்கு 5 அம்பாசிடர் கார்கள் ரூ.27.50 இலட்சம் செலவில் பழைய வாகனத்திற்கு மாற்றாக வாங்கி வழங்கப்படும்.

16. தலைமையிடம் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென பழைய கணினிகளுக்கு மாற்றாக ரூ.3.20 இலட்சம் செலவில் 10 புதிய கணினிகள், ரூ.0.80

2010 மே 11]

இலட்சம் செலவில் 10 லேசர் பிரிண்டர் கருவிகள் மற்றும் ரூ.2.25 இலட்சம் செலவில் 5 ஒளிநகல் கருவிகளும் வாங்கி வழங்கப்படும்.

17. தலைமையிடப் புகைப்படப் பிரிவு, திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களின் பயன்பாட்டிற்கென ரூ.12.50 இலட்சம் செலவில் 5 நவீன நிக்கான் டி200 டிஜிட்டல் காமிராக்கள் வாங்கி வழங்கப்படும்.

18. மாநிலச் செய்தி நிலைய நூலகத்தினை மேம்படுத்த, 13 கண்ணாடி சட்டமிட்ட இரும்பு பீரோக்கள் மற்றும் 10 இரும்பு அடுக்குகள் ரூ.2.42 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

19. செய்தி வெளியீட்டுப் பிரிவின் பயன்பாட்டிற்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாகனம் ரூ.0.40 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

20. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களின் களவிளம்பரப் பணிகளுக்கென ரூ.3 இலட்சம் செலவில் 5 வீடியோ புரொஜக்டர்கள் பழைய கருவிகளுக்கு மாற்றாக வாங்கி வழங்கப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS